**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.167/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-3 |
| Name | : | அருண்மணிகண்டன், வயது 30 |
| Father Name/Husband Name | : | முருகன் |
| Village | : | முடுக்குமீண்டான்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பிளம்பர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the $17^{th}$ day of February 2025.

**(எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது முடுக்குமீண்டான்பட்டியில் வசித்து பிளம்பராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அதனை நான் 21.02.2024 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் இரவு நடந்த திருட்டு சம்பந்தமாக அரசு மருத்துவமனையில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே வந்து போலிசார் திருட்டை பார்த்தாயா என்று கேட்டார்கள்.
2. பின்னர் சம்பவ இடத்தினை படம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள். அவர்கள் தயார் செய்த பார்வை மகஜரில் நான் முதலாவதாக கையொப்பம் செய்தேன். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. போலிசார் உங்களை விசாரித்தார்களா என்றால் ஆம். போலிசார் விசாரணையின் போது என்ன காரணத்திற்காக அரசு மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்பதை விசாரித்தார்களா என்றால் நான் அரசு மருத்துவமனையில் தான் வேலை பார்த்து வந்ததாக சொன்னேன்.

2. அ.சா.1 மற்றும் 2 புகார் கொடுத்த விவரம் தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமான விசாரணைக்கு நீங்கள் காவல்நிலையம் போனீர்கள் என்றால் நான் போகவில்லை. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் படம் வரைந்திருந்தது என்றால் சரிதான்.
3. படம் வரைந்த பேப்பரை தவிர வேறு பேப்பரில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களிடம் கையொப்பம் வாங்கும் போது மதியம் சுமார் 12.00–01.00 மணியிருக்குமா என்றால் ஆம்.
4. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் போலிசார் உங்கள் முன்னிலையில் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, 2 உங்கள் நண்பர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இனங்க கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. படம் வரைந்து காண்பித்ததால் தான் கையொப்பம் செய்தேன். தற்போது பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. 1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்தவதாக தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.